விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 203 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 26 வெள்ளிக்கிழமை (10.07.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## பலாலியில் பாதுகாப்பு வலயத்திலுள்ள
# காணிகளை விடுவிக்க இயலாது

### பாராளுமன்றில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர



- வடக்கு, கிழக்கில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த காணிகளை விடுவிக்க முடியாது.
- ஒரிரு மாதங்களில் 243 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படும்.
- காணி உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில்
# விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் விபரீத முடிவெடுத்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்திய 15 ஆம் பக்கம் பார்க்க

## அராலி மேற்குக் கடலில்
# கடற்றொழிலுக்கு
### சென்றவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

அராலி மேற்குக் கடலில் கடற்றொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க

## பாராளுமன்றில்
# நிதி தூய்தாக்கல் தடுப்பு சட்டமூலம் நிறைவேற்றம்

(கொழும்பு)

நிதி தூய்தாக்கல் தடுப்புச் (திருத்தச்) சட்டமூலம் அதிக பெரும்பான்மை வாக்குகளால் பாராளுமன்றத்தில் நேற்று (9) நிறைவேற்றப்பட்டுள்ளது.

15 ஆம் பக்கம் பார்க்க

# இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் விடுவிக்கப்படும்

### மாவட்டச் செயலாளர்களுடனான கூட்டத்தில் ஜனாதிபதி



இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தெரிவித்தார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த காலத்தில் கைப்பற்றப்பட்ட தமிழர்களின் நகைகள் எங்கே?

### பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி கேள்வி



(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் போது வன்னி வைப்பகங்களில் இருந்து இலங்கை இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட தமிழ் மக்களின் பல கோடி ரூபாய் பெறுமதியான நகைகளுக்கு என்ன நடந்தது என்பது குறித்து அரசாங்கம் முறை 15 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலைக்கழக முன்றலில்
# பாலியல் வன்முறைக்கு எதிரான அமைப்பு நேற்றுப் போராட்டம்



15 ஆம் பக்கம் பார்க்க

# நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலய படுகொலை
### 31ம் ஆண்டு நினைவேந்தல்



15 ஆம் பக்கம் பார்க்க

# இராணுவத்தினரின் தேவைக்காக
## மருதங்கேணியில் காணி சுவீகரிக்க முயற்சி

### காணி உரிமையாளர்களின் எதிர்ப்பையடுத்து காணி அளவீடு நிறுத்தம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக் 15 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நீர்கொழும்பு சிறைக் கலவரம்

# துப்பாக்கிச் சூடு நடத்திய அதிகாரிக்கு மரண அச்சுறுத்தல்

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதலின் போது, கைதிகள் சிறை வாசலை உடைத்துக்கொண்டு வெளியே தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காக துப்பாக்கிச் சூடு நடத்திய சிறைச்சாலை அதிகாரிக்கு, கலவரத்தில் ஈடுபட்ட கைதிகள்மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

“உன்னை எங்காவது கண்டால் கொன்றுவிடுவோம். வெளியே மாட்டும்போது உன்னை விடமாட்டோம், கொன்றுவிடுவோம்” என அவர்கள் மிரட்டியுள்ளனர்.

குறித்த அதிகாரி, டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே, அன்று ஏற்பட்ட அவசர நிலைமையைக் கருத்திற்கொண்டு கடமைக்குச் சமுகமளித்திருந்தார் என்பதும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, அவரது பாதுகாப்பிற்காக சிறைச்சாலைகள் திணைக்களம் தற்போது தேவையான அனைத்து நடவடிக்கைகளையும்மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, நீர்கொழும்பு சிறைச்சாலை மோதலை முன்னின்று வழிநடத்தியதாகக் கூறப்படும் "கட்டுவெல்லேகம சுரேஷை, அவர் தற்போது அடைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையிலுள்ள ஏனைய கைதிகள் குழுவினர் கொடூரமாகத் தாக்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல் காரணமாக அவருக்குச் சரியாக நடக்கக்கூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், நீர்கொழும்பு சிறைச்சாலை மோதலை கட்டுவெல்லேகம சுரேஷ் மற்றும் அவரது சகாக்கள் 13 பேர் இணைந்து திட்டமிட்டு நடத்தியுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. (ம-7)



நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தில் உயிரிழந்த ஏழு சிறைச்சாலை அதிகாரிகளின் பூதவுடல்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று இறுதி அஞ்சலி செலுத்தினார்.

# அரச சேவை ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர் நியமனம்



(கொழும்பு)

அரசு சேவை ஆணைக்குழுவின் புதிய தலைவராக எஸ். ஏ. நிமல் சரணதிஸ்ஸ ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன் ஏனைய உறுப்பினர்களாக பி. சனத் பூஜித, ஈ.ஆர்.வீரகோன், ஆர். கேதீஸ்வரன், ஜே.எம்.ஆர். ஜெயசுந்தர, ஈ.ஏ.பி. என்.எதிரிசிங்க, வைத்தியர் எஸ்.ஏ.ஏ. என்.ஜெயசேகர மற்றும் எம்.எச்.முகமது சமீல் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நேற்று (09) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து புதிய உறுப் பினர்களிடம் கைய ளித்தார்.

அரசு சேவை ஆணைக்குழுவின் பதவிக்காலம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்டிருந்த உறுப்பினர் வெற்றிடங்களுக்காகவே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ம-7)

## இராணுவ கட்டுப்...

கொழும்பில் நேற்று நடைபெற்ற மாவட்டச் செயலாளர்களுடனான கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 2027ஆம் ஆண்டுக்கான பாதீட்டு திட்டத்தில் ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் தனித்தனி நிதி ஒதுக்கீட்டை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த 13,000 குடும்பங்களை அடுத்த ஆண்டில் மீள்குடியேற்றத் திட்டமிட்டுள்ளதாகவும், இவர்களின் வீட்டுப் பிரச்சினையை விரைவாகத் தீர்ப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் அரசியல் தேவைகளுக்காக முறையற்ற விதத்தில் ஆரம்பிக்கப்பட்டு இடையில் கைவிடப்பட்ட வீடமைப்புத் திட்டங்களைக் கண்டறிந்து, அவற்றை நிறைவு செய்வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் காணிகளை விடுவிக்கவும், ஏனைய விசாலமான காணிகளை முதலீடுகளுக்காகப் பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வனவளங்கள் மற்றும் வனஜீவராசிகள் பாதிக்கப்படாமல் நிலங்களைப் பயிர்ச்செய்கைக்கு வழங்குவதை உறுதி செய்யுமாறு ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார். (ம-7)


**பெண் விற்பனையாளர் தேவை**

எமது ஜவுளி நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை. மதிய உணவுடன் கூடிய சம்பளம்

(C-6005)

**சிவகணேசன் Tex**

41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.



**அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 28.05.2026 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் நடராசா மயூரன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 11.07.2026ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலை 7 மணியளவில் நயினாதீவு புனித கங்காதரணி தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 13.07.2026ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பகல் 11.30 மணியளவில் இராமநாதன் வீதி, சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை எமது தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரும் வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

21/1D, கலட்டி முந்தல் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

இங்ஙனம்:- குடும்பத்தினர்
077 938 9437

(8015)



**மாருதம் உணவகம்**

(யாழ்.இந்துக் கல்லூரி சுற்று வட்டாரத்திற்கு அருகில்)

பின்வருவனவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

இன்று முதல் (10.07.2026)

- மசாலா தோசை
- நெய் முறுகல்
- வெங்காய தோசை
- பேப்பர் தோசை
- பரோட்டா (சீனி சம்பல்)



(8016)



**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகரில் உள்ள பிரபல்யமான (ஜவுளி) பிடவை நிறுவனத்துக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டவர்கள் உடன் தேவை.

- விற்பனையாளர்
- சிட்டை எழுதுநர்
- கணக்காளர்
- பைக்கிங் செய்பவர்

(அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(C-6004)

தொடர்புகளுக்கு

076 028 9835, 076 962 4477


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சர்வதேச தரத்திலான சுகாதார சேவை;

# நிதி ஒதுக்கீட்டிற்கு அரசாங்கம் தயார்

## ஜனாதிபதி அநுரகுமார உறுதி



(கொழும்பு)

**வெறும் சீர்திருத்தங்களுக்கும் அப்பால் சென்று, இந்நாட்டின் சுகாதார சேவையை சர்வதேச மட்டத்தில் தரமான நிலைக்கு உயர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும், அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார்.**

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கு 2026 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கும், 2027ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள் குறித்தும் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்துவதற்காக "ஆரோக்கிய நல்வாழ்வு சேவை மையங்களை" அமைக்கும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், ஆரம்ப சுகாதார சேவையை வலுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் உள்ள ஒவ்வொரு பிரிவினாலும் 2026 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இதன்போது தனித்தனியாக ஆராயப்பட்டதுடன், 2027 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுத் தேவைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்நாட்டின் சுகாதார சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்காக, விஞ்ஞான அடிப்படையிலான மூலோபாய முன்மொழிவுகளை விரைவாகச் சமர்ப்பிக்குமாறும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி இதன்போது அறிவுறுத்தினார்.

மேலும், வைத்தியசாலை கட்டமைப்பிற்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய தொழில்நுட்ப மாற்றம் குறித்தும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்ட வசதிகளை நாடளாவிய ரீதியில் உள்ள மக்கள் பெறக்கூடிய வகையில் நிறுவுவதன் மூலம், சுகாதார சேவையின் தரத்தை அடுத்த கட்டத்திற்கு உயர்த்த முடியும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (நி)

# கொழும்பு பல்கலையில் 71 மாணவர்களுக்கு டெங்கு

## கல்வி நடவடிக்கைகள் இணையவழியில்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் 71 மாணவர்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதன் துணைவேந்தர் பேராசிரியர் இந்திக கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அவர்களில் 5 பேர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் கொழும்பு பல்கலைக்கழக வளாகத்திற்குள் டெங்கு நோய்த் தொற்று பரவி வருவதன் காரணமாக, பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் இன்று முதல் ஜூலை 15 ஆம் திகதி வரை இணைய வழியில் நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும், மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது. (நி)

# தீவிரமடையும் தோல் நோய் வைத்தியர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தோல் நோய்கள் தற்போது தீவிரமான சுகாதார பிரச்சினையாக மாறியுள்ளதாக தோல் நோய் தொடர்பான வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக தோல் நோய்களுக்கான சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தோல் நோய் வைத்திய நிபுணர்கள் நயானி மதரசிங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனவே வேகமாக பரவி வரும் தோல் நோய்கள் தொடர்பில் பொது மக்கள் அவதானத்துடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)



# லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவுக்கு எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கையூட்டல் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு முதலீட்டுச் சபை தொடர்பான விடயமொன்றைச் சாதகமாக முடித்துக் கொடுப்பதற்காக, வர்த்தகர் ஒருவரிடமிருந்து 10 இலட்சம் ரூபாய் பணத்தை கையூட்டாகப் பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (நி)

# டெங்கு உயிரிழப்பு 45 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.



அத்துடன், இதுவரை நாடு முழுவதும் மொத்தம் 65,034 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# உலக சந்தையில் உயர்ந்தது எண்ணெய் விலை

(வோஷிங்டன்)

அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதல் மீண்டும் தீவிரமடைந்துள்ள நிலையில், அதன் தாக்கமாக உலகளாவிய மசகு எண்ணெய் விலைகள் தொடர்ந்து உயர்ந்து வருகின்றன.

அதன்படி, பிரெண்ட் ரக மசகு எண்ணெய் ஒரு பீப்பாயின் விலை 78.50 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

இது நேற்று முன்தினம் நிலவிய விலையுடன் ஒப்பிடுகையில் சுமார் 2.50 அமெரிக்க டொலர் அதிகரிப்பாகும். WTI ரக மசகு எண்ணெய் ஒரு பீப்பாயின் விலை 74.20 அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது. இது நேற்று முன்தினத்தை விட சுமார் 2 அமெரிக்க டொலர் அதிகரிப்பாகும்.

மத்திய கிழக்கில் நிலவும் பதற்றம் நீடித்தால், உலகளாவிய எரிபொருள் சந்தையில் மேலும் விலை உயர்வு ஏற்படக்கூடும் என சர்வதேச சந்தை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இந்த நிலைமை பல நாடுகளின் எரிபொருள் இறக்குமதிச் செலவையும் உள்நாட்டு எரிபொருள் விலைகளையும் பாதிக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இடிபாடுகளுக்கு நடுவே கால்பந்து போட்டியை ரசிக்கும் காஸா ரசிகர்கள்



காஸாவின் நுசைரத் முகாமில், கட்ட இடிபாடுகளுக்கு நடுவே நூற்றுக்கணக்கான கால்பந்து ரசிகர்கள் உலகக் கோப்பை போட்டியைக் காண திரண்டனர்.

ஆர்ஜென்டினா மற்றும் எகிப்து அணிகள் மோதிய போட்டியை ரசிகர்கள் பெரிய திரையில் கண்டு ரசித்தனர்.

அவர்களில் பலர் எகிப்து தேசியக் கொடிகளை ஏந்தியிருந்தனர்.

காஸா பகுதியை ஒட்டியுள்ள நாடான எகிப்து, ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையிலான போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தராக செயற்பட்டு வருகிறது. போட்டியில் ஆர்ஜென்டினா அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நேரத்திற்குள் பந்து வீச தவறியமைக்காக மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அபராதம்



அன்டிகுவா மற்றும் பார்புடாவின் நோர்த் சவுண்ட் பகுதியில் நடைபெற்ற இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்குள் பந்துவீசத் தவறியமைக்காக மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை அபராதம் விதித்துள்ளது.

இதன்படி, மேற்கிந்தியத் தீவுகள் அணியினருக்கு அவர்களின் போட்டி ஊதியத்தில் 10 சதவீத அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரண்டு புள்ளிகள் அந்த அணியின் மொத்தப் புள்ளிகளிலிருந்து குறைக்கப்பட்டுள்ளன.

ஐ.சி.சி எலைட் பெனல் போட்டி மத்தியஸ்தர் ஜவகல் ஸ்ரீநாத் இந்தத் தண்டனையை விதித்துள்ளார். அனுமதிக்கப்பட்ட நேரத்தைக் கணக்கில் கொண்ட பின்னரும், அந்த அணி இலக்கை விட இரண்டு ஓவர்கள் பின்தங்கியிருந்தமை கண்டறியப்பட்டது.

ஐ.சி.சி நடத்தை விதிகளின்படி, ஒவ்வொரு ஓவர் பின்தங்குவதற்கும் தலா 5 சதவீத அபராதமும், ஒவ்வொரு ஓவருக்கும் தலா ஒரு புள்ளியும் குறைக்கப்படுவது வழக்கமாகும். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் ரோஸ்டன் சேஸ் இந்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதால், முறையான விசாரணை இன்றி இந்தத் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கள நடுவர்களான போல் ரீஃபல், அஹ்சான் ராசா மற்றும் மூன்றாவது மற்றும் நான்காவது நடுவர்களால் இந்த குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. (நி)

## FIFA உத்தியோகபூர்வ முகநூல் பக்கம் முற்றுகை பிஃபாவை தனிமைப்படுத்தும் இரசிகர்கள்

ஃபிஃபாவின் (FIFA) அதிகாரபூர்வ முகநூல் பக்கத்தில் சர்வதேச கால்பந்து ரசிகர்கள் தங்களின் உச்சக்கட்ட கோபத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.

2026 FIFA உலகக் கோப்பை கால்பந்து தொடரின் நாக்-அவுட் சுற்றில் ஆர்ஜென்டினா மற்றும் எகிப்து அணிகளுக்கு இடையே நடை பெற்ற ஆட்டத்தின் போது, நடுவர்கள் மற்றும் வீடியோ உதவி நடுவர் (VAR) குழுவினர் ஆர்ஜென்டினாவுக்கு ஆதரவாகச் செயற்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

குறிப்பாக, இப்போட்டி முடிவடைந்ததைத் தொடர்ந்து FIFA பக்கத்தில் பதிவிடப்படும் எந்தவொரு புதிய பதிவாக இருந்தாலும், அதில் வழக்கமாகப் பதிவாகும் சாதாரண “Like” மற்றும் “Love” ரியாக்ட்களை முற்றிலும் பின்னுக்குத் தள்ளி, உலகளாவிய ரீதியில் ரசிகர்கள் இடும் “Angry” ரியாக்ட்களே முதலிடத்தைப் பிடித்து வருகின்றன.

எகிப்து அணியின் இரண்டு பெனால்டி வாய்ப்புகள் மறுக்கப்பட்டதும், எகிப்து அடித்த ஒரு கோல் ரத்து செய்யப்பட்டதும் ரசிகர்களிடையே பாரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியதே இதற்கு முக்கிய காரணமாகும் என குறிப்பிடப்படுகிறது.

இதன் விளைவாக, FIFA பக்கத்தில் ஆர்ஜென்டினாவின் வெற்றிக் கொண்டாட்டங்கள் அல்லது பொதுவான செய்திகள் என எதனைப் பதிவிட்டாலும், அதற்கு ஆதரவாக விழும் லைக்குகளை விட, பல மடங்கு அதிகமாகக் கோபத்தை வெளிப்படுத்தும் ரியாக்ட்களே அனைத்துப் பதிவுகளிலும் முதன்மையாகப் பதிவாகி வருகின்றன.

ஃபிஃபா மற்றும் நடுவர்கள்




திட்டமிட்டு ஆர்ஜென்டினாவை உலகக் கோப்பைத் தொடரில் முன்னோக்கி நகர்த்துவதாகக் குற்றம் சாட்டி, உலகெங்கிலும் உள்ள கால்பந்து ரசிகர்கள் ஃபிஃபாவின் அதிகாரபூர்வ முகநூல் பக்கத்தை முற்றிலும் முடக்கும் வகையில் தங்களின் கூட்டுப் போராட்டத்தை சமூக ஊடகங்களில் மிகத் தீவிரமாகத் தொடர்ந்து வருவதாக கால்பந்து ஆர்வலர்களால் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறைச்சாலை உயிரிழப்பை வைத்து அரசியல் செய்யாதீர்கள்!

## எதிர்க்கட்சிக்கு எச்சரிக்கை விடுத்த அமைச்சர்



(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலை விவகாரத்தை எதிர்க்கட்சியினர் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்கின்றனர் என்றும், உயிரிழப்புகளைக் கூட அரசியல் இலாபத்துக்காக அவர்கள் கையாள்கின்றனர் என்றும் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது,


நீர்கொழும்பு சிறைச்சாலை விவகாரம் தொடர்பில் நீதி அமைச்சர் ஏற்கனவே விரிவான விளக்கங்களை அளித்து, எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இருப்பினும், எதிர்க்கட்சியினர் தொடர்ச்சியாகப் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதை எதிர்க்கட்சியினர் ஏதோ மகிழ்ச்சியுடன் பேசுவதைப் போல் உணர்கின்றேன்.

இத்தகைய உயிரிழப்புகளைக் கூட குறுகிய அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்துவது முற்றிலும் தவறானதாகும் என அவர் தெரிவித்தார். (நி)

# வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணி ஆரம்பம்



(கொழும்பு)

வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் மற்றும் விநியோகிக்கும் பணிகளில் புதிய வாகனப் பதிவுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சுமார் ஓராண்டு கால இடைநிறுத்தத்திற்குப் பின்னர், வாகன இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகள் நேற்று முன்தினம் வேரஹெரவிலுள்ள அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த தற்காலிக இடைநிறுத்தம் காரணமாக சுமார் ஒரு மில்லியன் இலக்கத் தகடுகள் வழங்கப்பட வேண்டிய நிலையில் நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலுவையை நிவர்த்தி செய்வதற்கும், எதிர்காலத்தில் இலக்கத் தகடுகளைத் தடையின்றி விநியோகிப்பதற்கு தனியார் நிறுவனத்துடன் 3 பில்லியன் ரூபாய் பெறுமதியான ஐந்தாண்டு ஒப்பந்தத்தில் அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது.

வெரஹெர அலுவலகம் தற்போது இரு கட்டங்களாகத் தனது பணிகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது.

புதிதாகப் பதிவு செய்யப்படும் வாகனங்களுக்கான இலக்கத் தகடுகள் பகல் நேரத்தில் அச்சிடப்படும்.

நிலுவையில் உள்ள இலக்கத் தகடுகளை அச்சிடும் பணிகள் இரவு நேரத்தில் மேலதிக பணியாளர்களின் உதவியுடன் முன்னெடுக்கப்படும். (நி)


# INVITATION FOR BIDS (IFB)
## Kilinochchi District Secretariat
## Rehabilitation of Road works

The Chairman of Departmental Procurement Committee of Kilinochchi District Secretariat invites sealed bids from interested eligible and qualified bidder for the Works mentioned in the table from qualified bidders who possess CIDA registration for the grade given below.

1. Bidding will be conducted through **National Competitive Bidding** according to the Procurement guideline & Manual 2024
2. A complete set of Bidding Documents may be obtained from 13.07.2026 to 30.07.2026 between 09:00 hrs and 15:30 hrs on working days upon payment of a non-refundable fee to the District Secretary, Kilinochchi.
3. The duly completed Bids must be delivered to **"Chairman, Departmental Procurement Committee, Kilinochchi District Secretariat, Kilinochchi"** or deposited in the "Procurement Box" available in the **Chief Accountant's Room, Finance Branch** on or before **10.00 Hrs on 31th of July 2026**. Bids will be opened immediately after the closing of bids. Bidders or their authorized representatives are allowed to be present at the time of opening of the Bids.
4. Bidders shall submit only the purchased bid document.
5. A Pre Bid Meeting will be held on **27.07.2026** at 10.00Hrs at Conference Hall, District Secretariat, Kilinochchi.
6. All rights are reserved to the Chairman of DPC to accept, reject or partially accept of any bids at any stage without paying any compensation to any party.

| Description of Works | Estimated civil Cost Rs Mn. (without VAT in Mn) | CIDA Grade & Specialty | Contract Period (in Days) | Non-Refundable Fee. | Bid Validity Period | Bid Security Amount (Rs.) | Bid Security Validity |
|---|---|---|---|---|---|---|---|
| Rehabilation of Thirunagar Road -Package 1 KN/DPS/DO16/RRP-11/06-07 | 64.20 | C5 or Above Highway | 90 | 12,500 | 30.10.2026 | 970,000 | 27.11.2026 |
| Rehabilation of Thirunagar Road -Package 2 KN/DPS/DO16/RRP-11/06-08 | 48.20 | C6 or Above Highway | 90 | 5,000 | 30.10.2026 | 730,000 | 27.11.2026 |
| Rehabilation of Thirunagar Road -Package 3 KN/DPS/DO16/RRP-11/06-09 | 37.10 | C6 or Above Highway | 90 | 5,000 | 30.10.2026 | 560,000 | 27.11.2026 |
| Rehabilation of Kilinochchi Kannan Kovil Road - Package 4 KN/DPS/DO16/RRP-11/06-10 | 27.10 | C6 or Above Highway | 90 | 5,000 | 30.10.2026 | 410,000 | 27.11.2026 |

Chairman,
Departmental Procurement Committee,
Kilinochchi District Secretariat,
Kilinochchi.
T.P/ Fax:- 021 228 5352, Web http://kilinochchi.dist.gov.lk


# சிறுபோக நெல் கொள்முதல் ஜூலை 15 முதல் ஆரம்பம்

(கொழும்பு)

இந்த வருட சிறுபோகத்திற்கான நெல்கொள்முதல் நடவடிக்கைகளை, இம்மாதம் 15 ஆம் திகதி முதல் துரிதமாக ஆரம்பிக்க நெல் சந்தைப்படுத்தல் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நெல் கொள்முதல் பணிகளுக்காக திறைசேரியினால் 6 பில்லியன் ரூபாய் நிதி நேரடியாக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தவிர சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களின் பணிகளை ஊக்குவிக்கும் வகையில் அரச வங்கிகள் ஊடாக மேலதிகமாக 10 பில்லியன் ரூபாய் கடன் தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நெல் சந்தைப்படுத்தல் சபை ஊடாக முன்னெடுக்கப்படும் இந்த நெல் கொள்முதல் திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட செயலாளர்களின் முழுமையான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# பாதாள உலகக் குழுத் தலைவர் 'தெம்பிலி லஹிரு' வின் வீடு தீக்கிரை



(கொழும்பு)

வலஸ்முல்ல பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ள 'தெம்பிலி லஹிரு' என்பவருக்குச் சொந்தமான, மித்தெனிய - குடகல்ஆர பகுதியில் அமைந்துள்ள வீட்டிற்கு நேற்று இரவு அடையாளம் தெரியாத குழுவினர் சிலரால் தீ வைக்கப்பட்டுள்ளது.

வீட்டிற்குத் தீ வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், தெம்பிலி லஹிருவின் தாயார் மட்டுமே வீட்டிலிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்தத் தீ விபத்தில் அவருக்கு எந்த வித ஆபத்தும் ஏற்படவில்லை என குறிப்பிடப்படுகின்றது.

இச்சம்பவம் குறித்து மித்தெனிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழில் யூலை 13 முதல் 15 வரை டெங்கு கட்டுப்பாட்டு வாரம்

## மாவட்டச் செயலக கலந்துரையாடலில் தீர்மானம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இம் மாதம் - ஜூலை 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை சிறப்பு டெங்கு கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தி வீடுகள், பாடசாலைகள், தனியார், உயர்கல்வி நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், வணக்கஸ்தலங்கள் ஆகிய அனைத்து இடங்களிலும் முழுமையாக சிரமதானப்பணிகளை மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன் கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில், பிரதேச செயலாளர் தலைமையில் டெங்கு கட்டுப்பாட்டு தொடர்பான கூட்டத்தை இந்த வாரம் / அடுத்த வாரத்துக்குள் நடத்துவது எனவும் கிராம மட்ட டெங்கு கட்டுப்பாட்டு செயலணிக் கூட்டத்தை கிராம அலுவலர் தலைமையில் உடனடியாக நடத்தி சிரமதானப்பணிகள், சுத்திகரிப்பு பணிகளை மேற்கொள்வது எனவும் டெங்குக் கட்டுப்பாட்டுக்குழு ஜூலை 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதிக்குள் அதிக டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளுக்கு திடீர் களப்பணி மேற்கொண்டு கண்காணிப்பு மேற்கொள்ள வேண்டும் எனவும் விழிப்புணர்வு வாரத்தினை இம் மாதம் - ஜூலை 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை நடத்துவது எனவும், அந்த வகையில் ஜூலை 13 ஆம் திகதி சகல வணக்கஸ்தலங்களிலும், 14 ஆம் திகதி அரசாங்க அலுவலகங்களிலும், 15 ஆம் திகதி பாடசாலைகளிலும் தனியார், உயர்கல்வி நிறுவனங்களிலும் செய்வது என தீர்மானிக்கப்பட்டது. (8)


# தேசிய ஆக்கத்திறன் விருது பிரதேசமட்ட பரிசளிப்பு விழா

(பச்சிலைப்பள்ளி)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் நடாத்தும் தேசிய ஆக்கத்திறன் விருது பிரதேச மட்ட பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் சயனொளிபவன் முகுந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (8)

# சட்டவிரோத மரக்கடத்தல் துரத்திப்பிடித்த பொலிஸ்



(கிளிநொச்சி)

மாங்குளம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சட்டவிரோதமாக முதிரை மரப்பலகைகளைக் கடத்திச் சென்ற கப் ரக வாகனம் ஒன்றை, சினிமா பாணியில் பல கிலோமீற்றர் தூரம் துரத்திச் சென்று கிளிநொச்சி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

மாங்குளத்திலிருந்து ஏ9 வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி முதிரை மரப்பலகைகளை ஏற்றிக்கொண்டு கப் ரக வாகனமொன்று பயணித்துள்ளது.

இதன்போது ஏ9 வீதியில் பயணித்தால் பொலிஸாரிடம் மாட்டிக்கொள்வோம் என நினைத்த சாரதி, பொலிஸாரின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக இரணைமடு சந்தியிலிருந்து உள்வீதியான திருவையாறு பகுதியூடாக வாகனத்தைச் செலுத்தியுள்ளார்.

அதேநேரம், திருவையாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்காக பொலிஸாரால் வீதித்தடை போடப்பட்டிருந்தது.

அவ்விடத்தில் குறித்த கப் ரக வாகனத்தை பொலிஸார் மறித்து சோதனை செய்ய முற்பட்டபோது, சாரதி பொலிஸாரின் உத்தரவையும் மீறி அதிவேகமாக வாகனத்தைச் செலுத்தி தப்பியோடியுள்ளார்.

இந் நிலையில் கிளிநொச்சி பொலிஸார் உடனடியாக அந்த வாகனத்தை மோட்டார் சைக்கிள்களில் பின் தொடர்ந்து துரத்திச் சென்றனர்.


பொலிஸார் ஓயாது துரத்திய நிலையில், ஏ9 வீதி 155ஆம் கட்டைப் பகுதியில் கப் ரக வாகனம் சென்றுகொண்டிருந்த போது, அதன் சக்கரத்தின் ஆணிகள் உடைந்ததால் வாகனம் மேற்கொண்டு செல்ல முடியாமல் வீதியில் நின்றது.

உடனடியாக வாகனத்தை விட்டு இறங்கிய சாரதி, பொலிஸார் நெருங்குவதற்குள் அங்கிருந்து தப்பியோடிவிட்டார்.

எனினும், வாகனத்தில் இருந்த சாரதியின் உதவியாளரை பொலிஸார் மடக்கிப் பிடித்துக் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட கப் ரக வாகனத்தையும், அதிலிருந்த பெருமளவிலான சட்டவிரோத முதிரை மரப்பலகைகளையும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ள பொலிஸார், கைது செய்யப்பட்ட உதவியாளரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-316-315)

# மாவைக்கந்தனுக்கு 19 ஆம் திகதி கொடி!



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவங்கள் நடைபெறும்.

இவ் உற்சவங்களில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை பெரிய சப்பறத்திருவிழாவும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை பஞ்சரத பவனியும், 12 ஆம் திகதி புதன்கிழமை காலை கீரிமலை கண்டகி தீர்த்தத் தடாகத்தில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று அன்றைய்தினம் மாலை கொடியிறக்கமும் நடைபெறும்.

தொடர்ந்து 13 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை மாம்பழத் திருவிழாவும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை காங்கேசன்துறையில் கப்பல் திருவிழாவும் 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (8)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் கதிர்காம பாதயாத்திரைக் குழுவினர்க்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியில் 120 உணவுப் பொதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை அம்பாறை பாணம பகுதியில் வைத்து வழங்கப்பட்டன.

இவ் உதவிகளை ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார். (8)

# கடும் வறட்சியால் தீப் பற்றிய மரங்கள்

## சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படை



(வவுனியா)

வவுனியா மாநகரசபை எல்லைக்குட்பட்ட இறம்பைக்குளம் வட்டாரத்தில், நிலவி வரும் கடுமையான வெப்ப நிலை மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கம் காரணமாக பனை மற்றும் தென்னை மரங்களில் திடீரென ஏற்பட்ட தொடர் தீப்பரவல், மாநகர சபை தீயணைப்பு பிரிவினரின் அதிரடி நடவடிக்கையால் குறுகிய நேரத்திற்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இறம்பைக்குளம் பகுதியில் உள்ள பனை மற்றும் தென்னை மரங்கள் எதிர்பாராத விதமாக திடீரென தீப்பிடித்து எரியத் தொடங்கியுள்ளது. தற்போதைய கடுமையான வறட்சி மற்றும் சூழல் வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக தீ மிக வேகமாக பரவ ஆரம்பித்ததால், அப் பகுதியில் பெரும் பரபரப்பும் அச்சமும் ஏற்பட்டது.

சம்பவம் குறித்து தகவலறிந்த வவுனியா மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர், தீயணைப்பு வாகனங்களுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து, தீயைக் குறுகிய நேரத்திற்குள் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதனால் தீ அருகிலிருந்த குடியிருப்புப் பகுதிகளுக்கு பரவுவது தடுக்கப்பட்டு, பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வவுனியா மாநகர முதல்வர் சுந்தரலிங்கம் காண்டீபன் மற்றும் சம்பந்தப்பட்ட வட்டார உறுப்பினர்கள் நேரில் சென்று நிலைமை களைப் பார்வையிட்டனர்.

தற்போது நிலவி வரும் கடுமையான காலநிலை மாற்றம் மற்றும் வெப்ப அதிகரிப்பு காரணமாக, பொதுமக்கள் தீ விபத்துக்கள் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (8)

# விவேகானந்தா முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

கெருடாவில் விவேகானந்தா சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் விவேகானந்தா முன் பள்ளியின் வருடாந்த விளையாட்டு போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு விவேகானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

விவேகானந்தா சன சமூக நிலையத்தின் தலைவர் சிவானந்தம் கலைச் செல்வன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர் புவனேந்திரன் ரமேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (8-90)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்
ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார்
அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண் கணிதம்
மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில்
தொடங்க, திருமணத் தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில்
பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை,
குழந்தைப் பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில். (C-5996)

**074 196 4945, 076 682 7368**
**இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**




## வணிகக்கல்வி ஆசிரியர் தேவை

வடமராட்சி நெல்லியடிப் பகுதியில்
வசிக்கும் மாணவர் ஒருவருக்கு வீட்டிற்கு
வந்து வணிகக்கல்வி பாடம் கற்பிக்கக்
கூடிய ஆசிரியர் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 634 1216** (இ)


# சிறுவர்களை குறிவைக்கும் கும்பல்; பெற்றோர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)



சமகால சமூகத்தில் சிறுவர்களை இலக்கு வைத்து பல்வேறு நுணுக்கமான குற்றச்செயல்கள் இடம்பெற்று வருவதாக இலங்கை பொலிஸ்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து வெளியிட்டுள்ள முக்கிய அறிவுறுத்தலில், அறிமுகமில்லாத நபர்கள், சிறுவர்களைத் தங்கள் பால் ஈர்ப்பதற்காக இனிப்புகள், சொக்லேட், ஐஸ்கிரீம் அல்லது பல்வேறு விளையாட்டுப் பொருட்களைக் காட்டி ஆசை காட்டுகிறார்கள்.

இத்தகைய உணவுப் பொருட்களில் போதைப் பொருட்களையோ அல்லது மயக்கமடையச் செய்யும் பொருட்களையோ கலந்து, கொடுத்து சிறுவர்களைக் கடத்திச் செல்வதற்கு அல்லது துன் புறுத்துவதற்கு குற்றவாளிகள் முற்படுவதாக குறிப்பிட்டுள்ளனர்.

இத்தகைய ஆபத்தான சூழல் நிலவுவதால், தங்களது பிள்ளைகளின் பாதுகாப்பு குறித்துப் பெற்றோர்கள் மிகுந்த விழிப்புடனும், தொடர்ச்சியான அவதானத்துடனும் இருக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இத்தகைய அறிமுகமற்ற நபர்களிடம் எச்சரிக்கையாக இருக்குமாறு பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதும், அவர்கள் வெளியில் செல்லும் போது பெற்றோர் கள் கண்காணிப்பதும் மிக அவசியம் எனவும் பொலிஸ் தெரிவித்துள்ளது. (நி)

# திறப்பு விழா

(மாங்குளம்)

தமிழர் கலாசார வட்டம், ஜேர்மனியின் நிதி அனுசரணையுடன் வட்டு இந்து வாலிபர் சங்கம் ஆரம்பிக்கும் இலவச தொழிற் பயிற்சி மற்றும் தையல் நிலையைத் திறப்பு விழா இன்று வெள் ளிக் கிழமை காலை 10 மணிக்கு மாங்குளம் ஏ9 வீதியில் அமைந்துள்ள இலவச தொழிற் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்து வாலிபர் சங்க இணைப்பாளர், ஆறுமுகம் சிவாஸ்கரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் இரத்தினகுமார் நிசாந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (8)


## வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி (வ.து)

## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவங்களை சங்க வேலை நாட்களில் தலைமைக்காரியத்தில் ரூபா 50.00 ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் தலைவர், வலி கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - அச்சுவேலி என்ற முகவரிக்கு 25.07.2026 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபால் மூலமாக மட்டும் அனுப்பி வைக்க வேண்டும்.

**பதவி விபரம் :- கிளை முகாமையாளர்** - நிரந்தரம்

வெற்றிட எண்ணிக்கை - 06
பதவிப் பெயர் : கிளை முகாமையாளர் (சம்பளக்குறியீட்டு இல 208/15)
சம்பள அளவுத்திட்டம் :- 32435- 49035 (சுற்று நிருப இல 02/2025(1)இன்படி)
460x10-520x10-680x10

(இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் இதரபடிகளும் வழங்கப்படும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-**

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச்சங்க ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுச்சங்க ஊழியர் தராதரப் பரீட்சையில் சித்தி அல்லது க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு தமிழ் அல்லது சிங்கள மொழி, கணிதம், உட்பட 06 பாடங்களில் சித்தி.

**பொது நிபந்தனைகள்**

1. வயது எல்லை 25.07.2026 ஆந் திகதியன்று 18 வயதிற்கு குறையாத 45 வயதிற்கு மேற்படாதவாறு இருத்தல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள், அனுபவம் சார்ந்த சான்றிதழ்கள், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்திய வதிவிட சான்றிதழ், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. நியமனத்தின் போது சுற்றுநிருபத்திற்கமைவாக உரொக்கப்பிணை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.
4. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்கப்படவேண்டும்.
5. சங்கப்பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

(8011)

**தலைவர்**
**வலி கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**-அச்சுவேலி.**
**10.07.2026**



## வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

## கூறுவிலை கோரல்

வலி கிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகத்திற்கு வர்ணம் தீட்டுவதற்கான கூலிக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைப் படிவங்களை சங்க தலைமையகத்தில் பெற்று பூரணப்படுத்தி **"பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி"** எனும் முகவரிக்கு தபால் மூலமோ அன்றேல் நேரிலோ அனுப்பி வைக்கவும்

**விண்ணப்ப முடிவு திகதி : 20.07.2026 நண்பகல் 12.00 மணி**
**விண்ணப்பப்படிவ கட்டணம் : ரூபா.1000.00**
**மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் : ரூபா. 10000.00**

(C-5994)

**நீர்வேலி**
**10.07.2026**
**பொது முகாமையாளர்**



## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் வணிக பாட ஆசிரியர்
திரு.ப.பாலகிருஷ்ணன் அவர்களின் பாசமிகு மாமியார்

அமரர். **விசாலாட்சி துரையப்பா**

அவர்கள் கடந்த 30.05.2026 அன்று இறைபதம்
எய்தியதையிட்டு துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திப்பதோடு துயருற்றிருக்கும் அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
10.07.2026 (C-5997)

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை**



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 11.06.2026 வியாழக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத்தலைவி

அமரர். **நாகதம்பி அன்னபூரணம்**


அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று 10.07.2026 வெள்ளிக்கிழமை காலை
5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும்
11.07.2026 நாளை சனிக்கிழமை சபிண்டீகரணக் கிரியையும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்
பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம்
தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(C-6000)

**கல்லடி ஒழுங்கை,**
**பருத்தித்துறை.**
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

பாரதம்

## இந்தியப் பிரதமர் மோடி அவுஸ்திரேலியா விஜயம்



(கன்பெரா)

இந்தியப் பிரதமர் மோடி அரசு முறைப் பய ணமாக அவுஸ்திரேலியா சென்று ள்ளார்.

இந்தியப் பிரதமர் மோடி அரசுமுறைப் பயணமாக இந்தோனே சியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள் ளார். முதற்கட்டமாக இந்தோனேசியா பயண த்தை நிறைவு செய்த அவர், அடுத்த கட்டமாக அவுஸ்திரேலியா சென்ற டைந்தார். அப்போது மெல் போர்ன் விமான நிலை யத்தில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதன் பின்னர் அவுஸ் திரேலிய பிரதமர் அந் தோணி அல்பானீசை பிர தமர் மோடி சந்தித்தார். இந்த சந்திப்பிற்கு பிறகு, இந்தியா, அவுஸ்திரேலியா தொழில் முனைவோர் சந்திப்பில் தொழிலதிபர்கள் மத்தியில் உரையாற் றினார். (நி)



# நிலமை இன்னும் மே

# ஈரானுக்கு எச்சரிக்கை வி



**(வோஷிங்டன்)**

**சர்வதேச நீரவழியில் ஈரான் மேற்கொண்ட அத்துமீறல்க ளுக்குப் பழிவாங்கும் நடவடிக் கையாகவே தற்போதைய தாக் குதல்கள் நடத்தப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித் துள்ளார்.**

அவரது உத்தியோக பூர்வ எக்ஸ் தள பக்கத்தில் அவர் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் தெரிவித்த அவர், ஈரான் நேற்று முன் தினம் சர்வதேசக் கப்பல்கள் மீது நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலுக்குப் பழிவாங் கும் நடவடிக்கையாகவே இந்த சமீபத்திய தாக்குதல் கள் தொடுக்கப்பட்டுள்ளன .

அத்தோடு இத்தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கை கள் மீண்டும் தொடருமானால் நிலைமை இன்னும் மோசமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது எச்சரிக்கையோடு மட்டு மன்றி அமெரிக்கப் படைகள் நடத்திய தாக்குதல்களின் பின் னரான தற்போதைய நிலவரங்கள்

## கமேனியின் இறுதி ஊர்வலத்தை சீர்குலைக்க சதி- ஈரான் சாடல்

(டெஹ்ரான்)

அயதுல்லா அலி கமே னியின் இறுதி ஊர்வ லத்தை சீர்குலைக்க அமெ ரிக்கா முயற்சிப்பதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்கா- இஸ்ரேலின் தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி (வயது 86) கொல்லப்பட்டார். போர் காரணமாக அவரது உடல் அடக்கம் நடைபெறாமல் இருந்தது.

அமெரிக்கா-ஈரான் இடையே போர் நிறுத்தம் தொடர்பான ஒப்பந்தம் ஏற்பட்டதால் அயதுல்லா அலி கமேனியின் இறுதிச் சடங்கு கடந்த வாரம் தொடங்கியது.



தலைநகர் டெஹ்ரானில் அவரது உடலுக்கு இலட்சக் கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர். இதையடுத்து கமேனியின் உடல் ஈராக் குக்கு கொண்டு செல்லப் பட்டது. அங்கு கர்பலா நகரில் இறுதிச் சடங்கு நடந்தது.

இதையடுத்து அய துல்லா அலி கமேனியின் உடல், ஈராக்கில் இருந்து அவரது சொந்த ஊரான ஈரானின் மஷ்ஹத் நகருக்கு கொண்டு செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படுகிறது. அயதுல்லா அலி கமேனி உடல் அடக்கம் செய்யப்பட உள்ள மஷ்ஹத் நகருக்குச் செல்லும் பாதைகளில் உள்ள பாலங்களை குறிவைத்து அமெரிக்கா தாக்குதல்களை நடத்தி உள் ளது.


கமேனியின் இறுதிச் சடங்கை சீர்குலைக்க அமெ ரிக்கா முயற்சிக்கிறது. 2 பாலங்கள் மீதான தாக்கு தல்களுக்குப் பதிலடியா கவே, பஹ்ரைன் மற்றும் குவைத்தில் உள்ள அமெ ரிக்க ராணுவத் தளங்கள் மீதான ஏவுகணைத் தாக்கு தல்கள் நடத்தப்பட்டன.

மீண்டும் அமெரிக்கா தாக்குதலை நடத்தினால் இந்த பிராந்தியம் முழு வதும் உள்ள அமெரிக்கத் தளங்களை குறிவைப் போம் என ஈரான் தெரி வித்துள்ளது. (8)

## ஆப்பு வைக்

## 4,800 பேரை

## செய்யும் மைக்



(வோஷிங்டன்)


மைக்ரோசொப்ட் நிறுவனம் உலகளவில் சுமார் 4,800 ஊழியர்களைப் பணி நீக்கம் செய்யவுள்ளதாக அறிவித்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## மாசமாகும்..!

## விடுத்தார் ட்ரம்ப்



மற்றும் சேத விபரங்களை விளக்கும் வகையிலான பிரத்தியேகப் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளையும் அவர் தனது பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

இதன் மூலம் அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையே அண்மையில் எட்டப்பட்ட தற்காலிகப் போர் நிறுத்த உடன்படிக்கை அதிகாரபூர்வமாக முறிவடைந்துள்ளதை ட்ரம்ப் உலக நாடுகளுக்கு உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## க்கும் ஏ.ஐ

## ர பணிநீக்கம்

## க்ரோ சொப்ட




ளது.உலகின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட மைக்ரோசொப்ட் நிறுவனம், உலகளவில் சுமார் 4 ஆயிரத்து 800 ஊழியர்களை பணிநீக்கம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு, நிறுவன ஊழியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.இந்த பணிநீக்கம், மைக்ரோசொப்டின் மொத்த உலகளாவிய பணியாளர்களில் சுமார் 2.1 சதவீதமாகும். நிறுவனத்தின் செயற்பாடுகளை மேலும் திறன் மிக்கதாக மாற்றுவதும், செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) தொழில்நுட்பத்தில் முதலீடுகளை அதிகரிப்பதும், நிர்வாக கட்டமைப்பை எளிமைப்படுத்துவதும் இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகக் கூறப்பட்டுள்ளது. (நி)

## பிணவறைக்கு கொண்டு செல்லப்பட்ட குழந்தை உயிருடன் மீண்ட அதிசயம்





(வோஷிங்டன்)

மருத்துவரின் அஜாக்கிரதையால் இறந்து விட்டதாக தெரிவிக்கப்பட்ட குழந்தை உயிருடன் எழுந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அமெரிக்காவின் பீனிக்ஸ் நகரில் உள்ள ஒரு வீட்டின் நீச்சல் குளத்தில் விழுந்து, 18 மாத குழந்தை ஒன்று மயங்கியது. உடனே மீட்கப்பட்ட அந்தக் குழந்தையை பரிசோதித்த மருத்துவர், குழந்தை இறந்து விட்டதாக அறிவித்தார்.

இதையடுத்து, குழந்தையின் உடல்; மருத்துவமனையின் பிணவறைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சுமார் 5 மணி நேரத்திற்குப் பிறகு, அதிகாரிகள் முன்னிலையில் உடற்கூறாய்வு செய்ய வந்த மருத்துவர்கள், அந்தக் குழந்தை மூச்சு விடுவதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

உடனடியாக மற்றொரு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட அந்தக் குழந்தை, தீவிர சிகிச்சைக்குப் பின் அதிசயமாக உயிர் பிழைத்தது.

மருத்துவரின் அஜாக்கிரதையால் நேர்ந்த இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குழந்தை உயிர் பிழைத்த நிலையில், அதன் பெற்றோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அலட்சியமாக செயற்பட்டதாக குழந்தையின் பெற்றோர் மீது பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.

நீச்சல் குளம் மேற்பார்வையின்றி இருந்ததாகவும் அதற்கு செல்லும் வழியிலுள்ள கதவுகள் பாதுகாப்பற்ற வகையில் திறந்திருந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

## தாய்வானை நோக்கி நகரும் "பாவி" சூறாவளி

(தாய்பெய்)

பசுபிக் பெருங்கடலில் மணிக்கு சுமார் 200 கிலோமீற்றர் வேகத்திலான பலத்த காற்றுடன் தீவிரமடைந்துள்ள "பாவி" சூறாவளி தாய்வானை நோக்கி நகர்ந்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது 2024 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆசிய-பசுபிக் பிராந்தியத்தைத் தாக்கவுள்ள மிகக் கடுமையான சூறாவளியாக அமையக் கூடும் என்பதால், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

சுமார் 1,000 கிலோமீற்றர் சுற்றளவைக் கொண்ட இந்த பிரம்மாண்ட சூறாவளி, நாளை சனிக்கிழமை மாலை சீனாவின் கிழக்கு புஜியான் மாகாணத்திற்குள் நுழைவதற்கு முன்னதாக, வடக்கு தாய்வான் பகுதிக்கு மிக அருகில் பயணிக்கும் என சீன தேசிய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

1987 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தாய்வானைத் தாக்கவுள்ள மிகப்பெரிய சூறாவளி இதுவெனவும், சமீபத்திய ஆண்டுகளில் இவ்வளவு பெரிய சூறாவளிகள் உருவாவது மிக அரிதானது எனவும் தாய்வான் வானிலை நிலைய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

காலநிலை மாற்றம் காரணமாக சீனா, ஜப்பான் மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் இவ்வாறான அழிவுகரமான வானிலை நிலைமைகளை எதிர்கொள்ளும் போக்கு அதிகரித்துள்ளது.

குறிப்பாக இந்த ஆண்டில் நிலவும் "எல் நினோ" நிலைமை காரணமாக கடல் வெப்ப நிலை உயர்ந்துள்ளமை, இவ்வாறான கொடூர சூறாவளிகள் அடிக்கடி உருவாவதற்குக் காரணியாக அமைந்துள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# Invitation For Bids (IFB) - 2026

## KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

1. The Chairman, Divisional Procurement Committee (Div PC) on behalf of the Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

2. Bidding will beconducted through **National Competitive Bidding (NCB).**

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Highway Construction / Building Construction** for grade mentioned in the table below with the construction Industry Development Authority (CIDA )

4. Qualification requirements are indicated in section -5 ( Schedule) of the Bidding document.

5. Interested bidders may obtain further information from **The Chairman, Procurement Committee , Karachchi Pradeshiya Sabha, A9 Road ,Kilinochchi (T.P No : 021 228 5761, Fax No : 021 228 5690, E-Mail:kilinochchi1kps@gmail.com)** and inspect the bidding documents at the address given below **from 10.07.2026 until 23.07.2026 During 9.00 am to 3.00 pm** on Normal Working Days.

6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **The Chairman, Procurement Committee , karachchi Pradeshiya Sabha,A9 Road, Kilinochchi,** from **10.07.2026 until 23.07.2026 from 9.00 am to 3.00 pm.** Upon payment of a non-refundable fee as mentioned in the below table. The method of payment will be **by cash.**

7. Bids shall be delivered in duplicate to the address to **The Chairman, Procurement Committee ( Div PC) Karachchi Pradeshiya sabha , A9 Road, Kilinochchi** on or before **10.00 am on 24th July 2026** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

8. All bids shall be accompanied by a "*Bid-Security*, as in the table below.

9. The pre-bid meeting will be held on **16.07.2026** at **03.00 pm** at the **Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi.**

| | |
|---|---|
| Document Issuing/ Purchasing Period | **From 2026.07.10-2026.07.23** |
| Pre – Bid Conference | **At 03.00 Pm on 2026.07.16** |
| Closing and Opening of Bid | **At 10.00 Am on 2026.07.24** |

| S.No | BID No. | Name of the Work | Source of Funds | Estimated Cost (With Out VAT) (Rs.Mn) | Required Bid Security: Amount (Rs.) | Required Bid Security: Valid up to | ICTAD Grade Required | Bid Shall be Valid up to | Contract period | Non Refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/KN/KPS/2026/ PU-03/ C.W 02 | IMPROVEMENT OF 1ST ROAD SETRUKANDY MURASUMODDAI | COUNCIL | 2.54 | 38,000.00 | 07.10.2026 | C9, C8 and C7 (Highways) | 10.09.2026 | 90 Days | 2,000.00 |
| 2 | NP/KN/KPS/2026/PU-02/ C.W 07 | RECONSTRUCTION OF AANANTHAPURAM EAST 3RD LANE AANANTHAPURAM | COUNCIL | 3.39 | 51,000.00 | 07.10.2026 | C9, C8 and C7 (Highways) | 10.09.2026 | 90 Days | 2,000.00 |
| 3 | NP/KN/KPS/2026/ PU-02/ C.W 08 | IMPROVEMENT OF GNAVAIRAR ROAD THIRUNAGAR NORTH | COUNCIL | 3.39 | 51,000.00 | 07.10.2026 | C9 ,C8 and C7 (Highways) | 10.09.2026 | 90 Days | 2,000.00 |
| 4 | NP/KN/KPS/2026/ PU-02/ C.W 09 | RECONSTRUCTION OF NAGATHAPIRAN 2ND CROSS LANE AT UTHIYANAGAR | COUNCIL | 2.54 | 38,000.00 | 07.10.2026 | C9, C8 and C7 (Highways) | 10.09.2026 | 90 Days | 2,000.00 |
| 5 | NP/KN/KPS/2026/ PU-02/ C.W 40 | IMPROVEMENT OF KANAKAMPIGAIKULAM 3RD ROAD | COUNCIL | 2.54 | 38,000.00 | 07.10.2026 | C9 ,C8 and C7 (Highways) | 10.09.2026 | 90 Days | 2,000.00 |
| 6 | NP/KN/KPS/2026/ PU-02/ C.W 41 | IMPROVEMENT OF MARUTHANAGAR THAMPUKAMAM ROAD | COUNCIL | 2.52 | 38,000.00 | 07.10.2026 | C9, C8 and C7 (Highways) | 10.09.2026 | 90 Days | 2,000.00 |
| 7 | NP/KN/KPS/2026/ PU-02/ C.W 42 | RECONSTRUCTION OF MUTHUMARI AMMAN KOVIL ROAD AT UTHAYANAGAR EAST | COUNCIL | 2.54 | 38,000.00 | 07.10.2026 | C9, C8 and C7 (Highways) | 10.09.2026 | 90 Days | 2,000.00 |
| 8 | NP/KN/KPS/2026/ PU-03/ C.W 06 | IMPROVEMENT OF 10TH ROAD ULAVANOOR PUNNAINEERAVI | COUNCIL | 2.54 | 38,000.00 | 07.10.2026 | C9, C8 and C7 (Highways) | 10.09.2026 | 90 Days | 2,000.00 |
| 9 | NP/KN/KPS/2026/ PU-03/ C.W 07 | IMPROVEMENT OF CEMETERY ROAD MAYILVAKANAPURAM PIRAMANTHANARU | COUNCIL | 2.54 | 38,000.00 | 07.10.2026 | C9, C8 and C7 (Highways) | 10.09.2026 | 90 Days | 2,000.00 |
| 10 | NP/KN/KPS/2026/ PU-03/ C.W 08 | CONSTRUCTION OF 13TH UNIT B ROAD THARMAPURAM | COUNCIL | 8.80 | 132,000.00 | 04.11.2026 | C6, C7 and C8 (Highways) | 08.10.2026 | 90 Days | 3,000.00 |

**The address referred to above is (are):**
**Chairman,**
**Divisional Procurement Committee (DivPC)**
**Karachchi Pradeshiya Sabha.**

10.07.2026

(C-6001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தைவிலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 250 | 280 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 200 | -- | 220 | -- |
| பச்சைமிளகாய் | 700 | 800 | 600 | 550 | 800 | 600 |
| தக்காளி | 350 | 600 | 500 | 620 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 200 | 150 | 240 | 200 |
| கோவா | 250 | 200 | 300 | 250 | 200 | 200 |
| கரட் | 400 | 350 | 400 | 380 | 400 | 360 |
| பூசணி | 200 | 200 | 200 | 150 | 200 | 180 |
| புடோல் | 100 | 150 | 200 | 200 | 200 | 150 |
| வாழைக்காய் | 150 | 140 | 250 | 200 | 200 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 300 | 400 | 400 | 200 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | -- | 220 | 200 |
| பாகற்காய் | 800 | 1000 | 800 | 800 | 1000 | 600 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 200 | 300 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 300 | 400 | 350 | -- |
| பயற்றங்காய் | 300 | 300 | 400 | 350 | 400 | 400 |
| லீக்ஸ் | 350 | 400 | 300 | 350 | 300 | 300 |
| பீற்றூட் | 300 | 380 | 500 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 400 | 500 | 400 | 500 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 450 | 500 | 400 | 350 | 500 | 400 |
| போஞ்சி | 600 | 500 | 500 | 600 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 120 | 200 | -- | 250 | -- |
| கீரை – 1 பிடி | 80 | 80 | 150 | 80 | 80 | -- |
| தேசிக்காய் | 300 | 300 | 400 | 300 | 450 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 150 | 110 | 100-140 | -- |
| இராசவள்ளி | 400 | 450 | 400 | 350 | 350 | -- |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | 300 | 450 | -- |
| முள்ளங்கி | 250 | 160 | 200 | 180 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | -- | 60 | -- |
| வல்லாரை | 60 | 70 | 100 | -- | 100 | -- |
| ஈரப்பலா | -- | 200 | 100 | -- | -- | -- |

# மன்னார் கட்டையடம்பன் கிராமத்தில் காணிகளின்றி 35 குடும்பங்கள்

**(மன்னார்)** — **மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள செட்டியார் கட்டையடம்பன் கிராமத்தில் சுமார் 15 வருடங்களுக்கு மேலாக வசித்து வருகின்ற 35 குடும்பங்களுக்கு இதுவரை குடியிருப்பதற்கான காணிகள் எவையும் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

குறித்த கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்ற நிலையில் திருமணம் செய்து தனிக் குடும்பங்களாக சுமார் 35 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் அவர்கள் வசிப்பதற்கு நிரந்தர காணிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

தற்காலிக கொட்டில்களிலும், பெற்றோர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வசித்து வருவதுடன் தாங்கள் நாளாந்தம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

வீட்டுத் திட்டத்தை பெற்றுக் கொள்வதாக இருந்தால் கூட எமக்கு காணி இல்லை.

எமது பிரச்சினைகளை உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதும் எங்களின் கோரிக்கைகளை ஏற்று அவர்கள் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லை.

எனவே நாங்கள் அனைவரும் வேறு எந்த உதவியையும் கேட்கவில்லை.நாங்கள் குடி இருப்பதற்கு ஒரு துண்டு காணி கேட்கின்றோம்.

சொந்தக் காணி இருந்தால் மட்டுமே வீட்டுத் திட்டத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே எங்களதும், எமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு, காணி இன்றி பல்வேறு துன்பங்களுக்கு நாளாந்தம் முகம் கொடுத்து வருகின்ற எமது குடும் பங்களுக்கு காணிகளை வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-285)



# அலங்கார உற்சவம்

(சண்டிலிப்பாய்)

யாழ்ப்பாணம் கல்வளை சண்டிலிப்பாய் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு பொங்கல் உற்சவமும் மதியம் 12 மணியளவில் அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் இடம் பெற்று தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (8-110)

# இராசிபலன்

10.07.2026
ஆனி 26, வெள்ளிக்கிழமை
ஏகாதசி பின்னிரவு 2.08 மணிவரை

பரணி முற்பகல் 10.15 மணிவரை
சுப நேரம் 5.58-7.28 மணிவரை
இராகு காலம் 10.28-11.58 மணிவரை
கார்த்திகை விரதம் , ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்- சுவாதி

**வளவன்**

**மேஷம்:** குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்க பலமாக இருப்பார்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் உண்டாகலாம்.

**ரிஷபம்:** குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் கூடும், எதிலும் வேகத்தை குறைத்துச் செயற்படுவது நல்லது, வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், உடல் நலனில் அதிக கவனம் தேவை.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, பயணங்கள் செல்ல போட்டங்கள் கைகூடும்.

**கடகம்:** கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், தலைமைப் பொறுப்புகள் உங்களைத் தேடி வரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும், சாமர்த்தியமாகப் பேசி சாதனை படைக்கும் நாள், திடீர்ப் பயணங்கள் இடம் பெறலாம், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

**கன்னி:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், அதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வழிபாடு மகத்துவம் தரும், பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** பாதியில் நின்ற பணியை மீதியும் தொடங்குவீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரம்:** வர வேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பொருளாதார நிலைமையில் முன்னேற்றமுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்:** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும், சுப காரியப்பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, பணப்புழக்கம் கூடும்.

**உன் மீது நம்பிக்கை வைப்பவர் மீது அதிக நேரத்தைச் செலவிடு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1084





அவனை உடனே தம்மிடம் அனுப்பும்படி அரண்மனைச் சேவகனுக்குக் கட்டளையிட்டார்.

முருகய்யன் இளவரசரிடம் வந்ததும் அவருடைய காலில் விழுந்து, தேம்பி அழத் தொடங்கினான் இந்த மூட பக்தனைச் சமாதானப்படுத்துவதும் அவனிடம் விடயங்களைக் கிரஹிப்பதும் சிரமமான காரியந்தான், ஆயினும் செய்யவேண்டும். முருகய்யன் தனது துயரத்தின் காரணத்தைக் கூறினான் அதன் விவரமாவது முருகய்யன் நாகைப்பட்டினத்திலேயே தன் மனைவியிடமிருந்து பிரிந்துவிட்டான். திரு ஆரூர் வந்து சேர்ந்த பிறகு அவளும் அங்கு வந்திருக்கிறாளா என்று பார்ப்பதற்காக ஜனக் கூட்டத்தினிடையில் அலைந்து சுற்றினான். ஒரு ஜாம நேரம் தேடிய பிறகு இராஜ வீதியிலிருந்து பிரிந்து சென்ற ஒரு சந்தின் முனையில் அவன் மனைவியும், இளவரசர் ஏறிவந்த யானையைச் செலுத்திய யானைப்பாகனும் போவதைக் கண்டான்.

அவர்கள் சந்தில் புகுந்ததும் மிக வேகமாக நடந்து சென்றார்கள். முருகய்யனும் தொடர்ந்து போனான். கடைசியாக ஒரு வீட்டின் வாசலில் நின்றார்கள். அங்கே இன்னொரு மனிதன் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்ததாகத் தோன்றியது. அவனும் இவர்களுடன் சேர்ந்து கொண்டான். பிறகு மூன்று பேரும் சேர்ந்து போனார்கள். முருகய்யனுக்கு ஏதேதோ சந்தேகங்கள் உதித்தன. தன் மனைவியின் ஒழுக்கத்தைப் பற்றியே ஐயம் கொண்டான். உண்மையைக் கண்டு பிடிக்க ஆத்திரம் அடைந்தான். ஆகையால் அவர்களைப் போய்ப் பிடித்துவிடாமல் பின்னாலேயே போனான். அவர்கள் ஊரைத் தாண்டி வாய்க்கால் வயல் வரப்புகள் வழியாகச் சென்று கடைசியில் ஒரு மயானத்தை அடைந்தார்கள்.

முருகய்யனுடைய உள்ளம் பயங்கரத்தை அடைந்தது. ஆயினும் அவன் விடாமல் சென்று மயானத்தில் இருந்த ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டான். ராக்கம்மாளுடனும், யானைப் பாகனுடனும் வழியில் சேர்ந்து கொண்ட மனிதன், மயானத்தில் சாம்பலைப் பூசிக்கொண்டு ஏதேதோ பயங்கரமான மந்திரங்கள்ள உச்சரித்தான். பிறகு யானைப்பாகனைப் பார்த்து, "நாளைக் காலையில் உன் உயிருக்கு ஆபத்து வரப் போகிறது! ஜாக்கிரதையாயிருந்து பிழை!" என்றான். யானைப்பாகன் கதி கலக்கத்துடன், "என்ன ஆபத்து? எவ்விதம் வரும்? தெரிந்தால் அல்லவா பிழைக்கலாம்?" என்றான். மந்திரவாதி "யானைக்குத் திடீர் என்று மதம் பிடிக்கும்! நீ அருகில் சென்றதும் உன்னைக் கீழே தள்ளிவிட்டு ஓடும்! உன்னால்தான் யானைக்கு மதம் பிடித்தது என்று ஜனங்கள் எண்ணுவார்கள்.


உன் கையிலுள்ள அங்குசத்தைப் பிடுங்கி உன்னைக் கொன்று விடுவார்கள்!" என்றான் மந்திரவாதி. "ஐயையோ! தப்புவதற்கு வழி என்ன?" என்று யானைப் பாகன் கேட்டான். "நாளைக் காலையில் யானையிடம் நெருங்காமலிருந்து விடு!" என்றான் மந்திரவாதி. "அது எப்படி முடியும்? பின்னால் இராஜ தண்டனைக்கு உள்ளாக நேரிடுமே?" என்று யானைப்பாகன் அலறினான். "அப்படியானால், என் வீட்டுக்கு வா! மந்திரித்த கவசம் தருகிறேன் அதை அணிந்து கொண்டு போ! கையில் அங்குசத்தைக் கொண்டு போகாதே!" என்றான் மந்திரவாதி. "அப்படியே ஆகட்டும், ஐயா! இளவரசருக்கு ஏதேனும் ஆபத்து நேருமா?"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பாசமுள்ள நாய்க்குட்டி



(நேற்றைய தொடர்ச்சி)

"வளர்த்து வளர்த்துச் சாகக் கொடுப்பது பெரிய வேதனையாக இருக்கிறது. யாராவது வளர்த்து விற்பதாக இருந்தால் வாங்கிக் கொள்ளலாம்" என்றேன் நான்.

நண்பன் தேடிப் பார்த்துச் சொல்லுவதாகக் கூறிச் சென்றான். மூன்றாவது நாள் தொலைபேசி மணியடித்தது. நண்பன் அறிவழகன் தான் பேசினான்.

"அழகான நாய், அறிவுள்ள நாய், உயர்ந்த சாதி நாய், நன்றாக வளர்ந்த நாய் ஒன்று விலைக்குக் கொடுக்கிறார்களாம், போய்ப் பார்த்து வாங்கிக் கொள்" என்று கூறி முகவரியை எழுதிக் கொள்ளச் சொன்னான்.

மறுநாளே நான் அந்த வீட்டுக்குச் சென்றேன். நாயைக் காட்டினார்கள், அப்படியே என் சிவாஜியைப் போலவே இருந்தது. அதே முகம், அதே கண்கள், அதே பார்வை, அதே சாதி, அதே உயரம் எல்லாம் அதுபோலவே! நிறம் தான் வேறு. என் சிவாஜி பழுப்பு நிறம் முதுகுப் பக்கம் மட்டும் திட்டாக வெள்ளை. இந்த நாய் வெள்ளை நிறம் காதுகளில் மட்டும் பாதி பாதி பழுப்பு நிறம். "இந்த நாய்க்கு என்ன பெயர் வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன். "சிவாஜி!" என்று சொன்னார்கள்,

வியப்பாய் இருந்தது. கேட்ட விலையைப் பேரம் பேசாமல் கொடுத்தேன். அன்போடு அதன் முதுகில் தடவிக் கொடுத்தேன்.

அந்த வீட்டுக்காரர் நாயை அழைத்துக் கொண்டு வந்து என் வண்டியில் ஏற்றி விட்டார். நானும் ஏறிக் கொண்டேன். வண்டி புறப்பட்டது.

நாய் பின்பக்கம் திரும்பிப் பார்த்தது. நானும் திரும்பிப் பார்த்தேன். அந்த வீட்டுக்காரர் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தார்,

கதவோரத்தில் நின்ற அவர் மனைவி கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள். என் அருகில் இருந்த நாய் அங்கேயே பார்த்துக் கொண்டிருந்தது. அவர்கள். வீடு கண்ணுக்கு மறைந்த பிறகும் கூட வண்டி வேறு சந்தில் திரும்பிய பிறகும் கூட, அதன் பார்வை! திசை மாறவில்லை. என் வீட்டிற்கு வரும் வரையில் அதன் கழுத்து காரின் பின் பக்கம் திரும்பியபடியே இருந்தது.

நான் வண்டியை விட்டு இறங்கி வீட்டுக்குள் நுழைந்தேன். 'சிவாஜீ' என்று அழைத்தேன்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குற்றவாளிகளை உடன் கைது செய்க!

சிறிய பாம்பாயினும் அதனைப் பெரிய தடியால் அடிக்க வேண்டும் என்ற பழமொழி நம் தமிழ்மொழியில் உண்டு.

இந்தப் பழமொழி கூறுகின்ற தத்துவம் மிகவும் ஆழமானது.

ஆம், சிறிய பாம்பு என்று அலட்சியம் செய்து விடக்கூடாது. பாம்பு சிறியதாயினும் அதன் விசம் பெரியது.

ஆக, சிறிய பாம்பு என்ற நினைப்போடு அதனைச் சிறிய தடியால் அடிக்க விளைந்தால், அது ஆபத்தாகிவிடும்.

இங்குதான் சிறிய பாம்பாக இருந்தாலும் அதனைப் பெரிய தடியால் அடிக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.

இங்கு சிறிய பாம்பு எனக் கூறப்படுவது ஒரு குறியீடு மட்டுமே. அந்தக் குறியீடு பலதிலும் பொருந்தக்கூடியது என்பது தான் நாம் இங்கு கவனிக்க வேண்டிய விடயம்.

அந்த வகையில் இப்போது நாட்டில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் ஊழல் ஒழிப்பு – போதைப்பொருள் அழிப்பு – குற்றச்செயல்களுக்கான விசாரணை என முக்கோண நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

இங்கு அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளால் அதிர்ந்து போயிருப்பவர்கள் சாதாரண பொதுமக்கள் அல்ல.

மாறாக, அவர்கள் மலைவிழுங்கிகள். மிகப்பெரும் பொருளாதாரப் பலத்தை உடையவர்கள். உலக தாதாக்களுடன் வலைப்பின்னல் தொடர்பைக் கொண்டவர்கள்.

எனவே அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்வினையாற்ற அவர்கள் நிச்சயம் முனைவார்கள்.

இவ்வாறு பலம் பெற்ற குறித்த தீயசக்திகள் எதிர்வினையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் இல்லாதவாறு, அரச நடவடிக்கை இருக்க வேண்டும்.

அதாவது தீயசக்தியை அழிப்பதாக இருந்தால், அதனை அதிரடியாகச் செய்வது கட்டாயமானது.

அப்போதுதான் பலம்பெற்ற அத்தீயசக்திகளை அடக்கவும் ஒடுக்கவும் முடியும்.

ஆம், இப்போது அரசாங்கம் குற்றவாளிகளைக் கைது செய்யும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

அதிலும் முன்னாள் அமைச்சர்கள், புலனாய்வுத் துறையில் முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் என முன்னைய ஆட்சி அதிகாரங்களில் இருந்து கொண்டு ஊழல் புரிந்தவர்கள், தாக்குதல் நடத்தியவர்கள், அதற்குச் சூழ்ச்சி செய்தவர்கள், போதைவஸ்து கடத்தல் செய்பவர்கள் எனப் பலதரப்பினரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இவ்வாறு கைது செய்யும் போது, முக்கிய புள்ளிகள் விடயத்தில் **பொறுத்திருத்தல்** என்பது மிகவும் ஆபத்தானது.

இத்தகைய பொறுத்தல் அல்லது தாமதப்படுத்துதலானது, மிகப் பயங்கரமான நபர்களை ஒன்றிணைத்து அவர்களைப் பலப்படுத்திவிடும்.

எனவே ஆட்சிப் பீடங்களில் இருந்தபோது கொடுமையான செயல்களில் ஈடுபட்ட அனைவரையும் காலதாமதமின்றிக் கைது செய்து அவர்களை விசாரிக்க வேண்டும்.

அப்போதுதான் நிலைமை சுமுகமாகவும் அரசுக்கு எதிரான செயல்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.

# திடீரென சொத்துக்களை குவிக்கும் நபர்கள் குறித்து அறிவிக்குக

## பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

திடீரென சொத்துக்களைக் குவித்து ஆடம்பர வாழ்க்கையை வாழும் நபர்கள் குறித்து அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

சட்டபூர்வமான வருமான வழிமுறைகள் ஏதுமின்றி, திடீரென ஈட்டப்பட்ட பெருமளவிலான சொத்துக்கள் மற்றும் ஆடம்பர வாழ்க்கை முறையைக் கொண்டுள்ள நபர்கள் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் (CID) தாங்களும் தீவிர அவதானம் செலுத்தி வருவதாக இலங்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பிற சட்டவிரோத வழிகளில் ஈட்டப்பட்ட சொத்துக்கள் மற்றும் சட்டவிரோத சொத்துக் குவிப்புகள் தொடர்பான விசாரணைகள் தற்போது நாடு முழுவதும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சமூகத்தின் நல்வாழ்வைக் கருத்திற் கொண்டு, இது போன்ற சந்தேகத்திற்கிடமான செயற்பாடுகள் குறித்து தங்களுக்குத் தகவல் தெரிவிக்குமாறும் பொலிஸார் பொதுமக்களிடம் மேலும் கேட்டுக் கொண்டுள்ளனர். (ம-7)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

## கோட்டாவின் மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் இருந்து தாம் கைது செய்யப்படுவதை தடுத்து உத்தரவிடக் கோரி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்த எழுத்தாணை மனு மீதான மேலதிக விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

குறித்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஒத்திவைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று(09) உத்தரவிட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் ரோஹந்த அபேசூரிய மற்றும் நீதியரசர் சரத் திஸாநாயக்க ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில், இந்த மனு நேற்று (09) நான்காவது நாளாகவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நேற்றைய தினம் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான பிரதி மன்றாடியார் நாயகம் சுஹர்ஷி ஹேரத் விடயங்கள் தொடர்பில் மேலதிக சமர்ப்பணங்களை முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து குறித்த மனு மீதான மேலதிக விசாரணைகளை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக நீதிமன்றம் அறிவித்தது. (ம-7)

# 10 ஆயிரம் கிலோ கடல் அட்டைகளுடன் 26 மீனவர்கள் மன்னாரில் கைது

(மன்னார்)

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் கடத்தி வரப்பட்டதாகக் கூறப்படும், சுமார் 10 ஆயிரம் கிலோ கிராம் எடையுடைய 60,448 கடல் அட்டைகளுடன் 26 மீனவர்கள் நேற்று (09) மன்னார், சௌத்பார் கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் கடல் அட்டைகள் கடத்தப்படுவதாகக் கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்தச் சட்டவிரோத கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட 12 படகுகளும் அவற்றில் இருந்து சுமார் 10 ஆயிரம் கிலோ கிராம் எடையுடைய 60,448 கடல் அட்டைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைப்பற்றப்பட்ட படகுகள் மற்றும் கடல் அட்டைகள் சௌத்பார் கடற்கரைக்குக் கொண்டு வரப்பட்டு, முதற்கட்ட நடவடிக்கைகளின் பின்னர் மன்னார் மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதுகுறித்து கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், பறிமுதல் செய்யப்பட்ட கடல் அட்டைகள் நேற்று (09) மாலை கடற்படை மற்றும் பொலிஸார் முன்னிலையில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்பட்டன. (ம-7,285)

# நாவற்குழிப் பகுதியில் சடலம் ஒன்று மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ32 வீதி நாவற்குழிப் பகுதியில் அமைந்துள்ள பொதுக் காணியொன்றில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை முதியவர் ஒருவர் தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நாவற்குழி மேற்குப் பகுதியில் உறவினர் வீட்டில் தற்காலிகமாக வசித்து வந்த 70 வயதான முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## அநுராதபுரத்தில்

# 28 வயதுடைய இளைஞன் ஹெரோயினுடன் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுரம், விஜேபுர பகுதியில் 5 கிராமிற்கும் அதிகளவான ஹெரோயின் போதைப் பொருளுடன் 28 வயதுடைய இளைஞர் ஒருவர் அநுராதபுரம் வலய மது ஒழிப்புப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வலய மது ஒழிப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக, அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விஜேபுர, நாகசேன மாவத்தை பகுதியில் நேற்று முன்தினம் (8) மாலை நடத்தப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது, சந்தேக நபரிடமிருந்து 5 கிராம் 325 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் அநுராதபுரம், பாலாடிகுளம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 28 வயதுடையவர் என ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய மது ஒழிப்புப் பிரிவு பொலிஸார் நடத்தி வருகின்றனர். பொலிஸ் விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூபாயின் பெறுமதியில் தொடர் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்றைய தினம் மேலும் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 340.86 ரூபாயாகப் பதிவாகியுள்ளதுடன் கொள்வனவு விலை 331.34 ரூபாயாகப் பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 339.73 ரூபாயாகவும், கொள்வனவு விலை 330.28 ரூபாயாகவும் பதிவாகியிருந்தது.

இதேவேளை, ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 442.55 ஆகவும் விற்பனைப் பெறுமதி 457.75 ஆகவும் பதிவாகியுள்ளது.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 377.26 ஆகவும் விற்பனைப் பெறுமதி 390.79 ஆகவும் பதிவாகியுள்ளது.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 232.64 ஆகவும் விற்பனைப் பெறுமதி 241.70 ஆகவும் பதிவாகியுள்ளது.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 227.21 ஆகவும் விற்பனைப் பெறுமதி 238.64 ஆகவும் பதிவாகியுள்ளது. (நி)

# 3 இலட்சம் குடும்பங்களுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

இந்த ஆண்டில் மேலதிகமாக 3 இலட்சம் குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீர் வசதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு, நிர்மாண மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த இலக்கை அடைவதற்காக, 175 பில்லியன் ரூபாய் மதிப்பிலான குடிநீர் வழங்கல் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்தின் ஒரு அங்கமாக, தம்புத்தேகம குடிநீர் வழங்கல் திட்டம் ஜனாதிபதியின் தலைமையில் இன்று மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமையின் நிதி உதவியுடன் 52 பில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தத் திட்டத்தின் மூலம், 50,000 குடும்பங்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# ஒரு கோடி ரூபாய் அபராதம் செலுத்தத் தவறினால் சிறை

## பிரசன்ன ரணதுங்கவுக்கு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, எதிர்வரும் ஒரு வருடகாலத்தினுள் ஒரு கோடி ரூபா அபராதத் தொகையை செலுத்தத் தவறினால் அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தபோது, கொலன்னாவவின் மீதொட்டமுல்ல பகுதியில் காணி நிரப்புதல் செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்குவதற்காக ஒரு தொழிலதிபரிடம் இருந்து 6.4 மில்லியன் ரூபா கப்பம் கோரிய குற்றச்சாட்டின் கீழ் பிரசன்ன ரணதுங்கவுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற நீண்ட விசாரணையின் பின் கடந்த 2022 ஆம் ஆண்டு குறித்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்போது பிரசன்ன ரணதுங்க குற்றவாளி எனக் கண்டறியப்பட்டார். அந்தக் குற்றத்திற்காக அவருக்கு 25



லட்சம் ரூபாய் அபராதமும் ஒரு கோடி ரூபாய் இழப்பீடும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

எனினும் அந்தத் தீர்ப்புக்கு எதிராக பிரசன்ன ரணதுங்க சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மேல்முறையீட்டின் தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்போது அவரது மேன்முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டதுடன், 2027 ஜூலை 6 ஆம் திகதிக்கு முன்னர் விதிக்கப்பட்ட அபராதம் மற்றும் இழப்பீட்டுத் தொகையைச் செலுத்த வேண்டும் என கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றம் உத்தரவிட்ட இத்தொகையைச் செலுத்தத் தவறினால், மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவை மீறியதற்காக பிரதிவாதிக்கு 9 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பிரசன்ன ரணதுங்க சார்பில் முன்னிலையான வழக்கறிஞர்கள், உரிய இழப்பீட்டுத் தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தி விடுவதாக நீதிமன்றத்தில் உறுதியளித்தனர்.

இந்த வாக்குறுதியைக் கருத்தில் கொண்டு, பிரதிவாதியை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை நீதிமன்றம் மேற்கொண்டது. (நி)





### சார்விக்




### அழகுமதி





### மேரிலூட்ஸ்




### மெமோஷா




### டெய்சன்




### ஜெறின்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவாலி...

யாழ்ப்பாணம் நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 31ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று மாலை சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நடைபெற்றது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தின் பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர் தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

கடந்த 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

அன்று அதிகாலை வலிகாமம் பிரதேசங்களை நோக்கி எறிகணை தாக்குதல், விமானத் தாக்குதல்களின் உதவியுடன் இராணுவத்தினர் முன்னேறிப்பாய்தல் எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தொடர் எறிகணைத் தாக்குதல்களால் தமது வாழ்விடங்களை விட்டு நவாலியை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் தஞ்சமடைந்தனர்.

அன்று காலை திடீரென வந்த மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை மக்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயம் மற்றும் ஆலயம் மீது வீசின.

இக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் குழந்தைகள் பெண்கள் உட்பட 147 பேர் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகியிருந்தனர். 350க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர். (ம-7,30,33)

## பாலியல்...

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பிலான குற்றச்சாட்டு தொடர்பில் இருவருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் விசாரணைகளை இழுத்தடிக்காது, துரிதப்படுத்தக் கோரி, பல்கலை முன்றலில் நேற்றுக் காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாலியல் வன்முறைகளுக்கு எதிரான மக்கள் இயக்கம் எனும் அமைப்பினர் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "பாதிக்கப்பட்டவர்களின் குரல்களை கேளுங்கள் - அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்'. "பல்கலைக்கழகங்களில் பெண்களின் பாதுகாப்பை உடனடியாக உறுதி செய்ய வேண்டும்", " குற்றத்தை மறைக்க சட்டத்தை ஆயுதமாக்காதே ... " கண்ணியத்தை இழந்து கல்வியைப் பெறும் இடமா யாழ்.பல்கலைக்கழகம்", பாலியல் சுரண்டல்களுக்கு மௌனம் ஏன்?" போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7,33)

## நிதி தூய்தாக்கல்...

இந்தச் சட்டமூலம் மீதான வாக்கெடுப்பின் போது சட்டமூலத்திற்கு ஆதரவாக 154 வாக்குகளும் எதிராக இரு வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதன்படி அதிகபெரும்பான்மை வாக்குகளால் இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம-7)

## கடற்றொழிலுக்கு...

இதில் அராலி மத்தி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்லையா சிவகுமார் (வயது - 49) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த நபர் நேற்றுக் கடற்றொழிலுக்கு சென்றுள்ளார். அதன்பின்னர் நேற்று மதியம் 12.40 மணியளவில் அவர் கடலில் சடலமாக மிதப்பதை வேறு மீனவர்கள் அவதானித்தனர்.

பின்னர் இது குறித்து உறவினர்களுக்கும் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,104,33)

## யுத்தகாலத்தில்...

யான விசாரணை நடத்த வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிதி தூய்தாக்கல் தடுப்புச் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், "யுத்த காலத்தில் தமிழர்கள் தங்கள் விவசாயத் தேவைகளுக்காகவும், பிள்ளைகளின் கல்விக்காகவும் வன்னி வைப்பகங்களில் பெருமளவிலான நகைகளை அடகு வைத்திருந்தனர்.

இறுதி யுத்தத்தின் போது, இந்த நகைகள் அடங்கிய கொள்கலன்களை அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் இராணுவத்தினர் பொறுப்பேற்றதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பலமுறை பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## இராணு...

குட்பட்ட மருதங்கேணி பகுதியில், இராணுவத்தின் தேவைக்காக எனக் கூறி காணி சுவீகரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு காணி உரிமையாளர் மற்றும் பொதுமக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து காணி சுவீகரிப்பு நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளனர்.

நேற்று காலை காணி அளவீட்டு நடவடிக்கைக்காக, காணி உரிமையாளர்கள் மற்றும் அயல் காணி உரிமையாளர்களுக்கு பிரதேச செயலகத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டது.

எனினும், அப்பகுதியில் 30 ஏக்கருக்கும் அதிகமான காணிகள் இருந்த போதிலும், அவற்றில் 20 ஏக்கர் காணியை மட்டும் அடையாளப்படுத்தி சுவீகரிக்க இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதனை ஏற்க மறுத்த காணி உரிமையாளர், குறித்த காணியை வேண்டாம்என நில அளவைத்திணைக்களத்திற்கு கடிதம் மூலம் அறிவித்ததைத் தொடர்ந்து, காணி அளவீட்டு நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ம-7,60)

## விபரீத...

சாலையை அண்மித்த வீடொன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி குடும்பஸ்தர் தூக்கிட்டதனை அவதானித்த உறவினர்கள் அவரை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்த போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,30)


மஹஜன சம்பத
திகதி 2026.07.09
சீட்டிழுப்பு இலக்கம் 6243
A 6 8 3 8 5 6
அத சம்பத A 3 8 5 6
சீட்டிழுப்பு இலக்கம் 818

சுப தவசக்
திகதி 2026.07.09
சீட்டிழுப்பு இலக்கம் 0359
மேடம் 51 57 65
4743

தன நிதானய
திகதி - 2026.07.09
சீட்டிழுப்பு இலக்கம் - 2273
Q 19 39 75 80 Q
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

மெகா பவர்
திகதி 09/07/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2591
X 18 36 41 56 61

ஜய
திகதி 2026.07.09
சீட்டிழுப்பு இலக்கம் 0511
Z 6 2 4 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4485
சீட்டிழுப்பு திகதி 09.07.2026
T 55 59 67 79

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.07.09
சீட்டிழுப்பு இலக்கம் 1552
தனுசு 01 14 29 58 தனுசு

உத்தியோகபூர்வ முடிவுகள்
09.07.2026 வெற்றி வாரம் 0951
Y 9 0 7 7 0 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,570,143.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3217
25000 பணப் பரிசு 95623
சீட்டிழுப்பு திகதி 2026.07.09
தினம் வியாழக்கிழமை
01 08 31 55 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,916,354.40

சனிதா
திகதி 09.07.2026 வெற்றி வாரம் 5378
07 13 51 74 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,334,269.20
ரூ. 50,000/- 85387

சசிரி
வெற்றி வாரம் 1047
சீட்டிழுப்பு திகதி 09.07.2026
வியாழக்கிழமை
28 35 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,124,040.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4929
சீட்டிழுப்பு திகதி 09.07.2026
தினம் வியாழக்கிழமை
14 25 42 45 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,002,759.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 23 38 40 42 50
2393
09.07.2026 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.312,093,721.00

அட கோட்டிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் 3043
சீட்டிழுப்பு திகதி 2026.07.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,709,912.00
37 39 48 58 C


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பலாலியில்...

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை (9) நடைபெற்ற அமர்வில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் நிலையியல் கட்டளை இருபத்தேழு இரண்டின் கீழ் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் உரையாற்றியதாவது,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தவில்லை. அத்தியாவசிய தேவை மற்றும் பாதுகாப்புக் காரணிகளின் நிமிர்த்தம் இந்தக் காணிகள் பயன்படுத்தப்படுகின்றன.

பலாலி இராணுவ வைத்தியசாலை கட்டடத்தை புனரமைக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. இந்த வைத்தியசாலை 27.9 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வைத்தியசாலை புனரமைப்புக்கு 99.3 மில்லியன் ரூபா மதிப்படப்பட்டு 55 மில்லியன் ரூபா இதுவரையில் செலவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 42.11 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

முப்படையின் பயன்பாட்டில் உள்ள தேசிய முக்கியத்துவம் வாய்ந்த காணிகளை தற்போது விடுவிப்பதற்கான இயலுமை கிடையாது. பலாலி இராணுவ வைத்தியசாலை அமைந்துள்ள காணியை இராணுவ பயன்பாட்டில் இருந்து விடுவிக்க முடியாது. பலாலிப் பகுதி அதி அவதானமிக்க பாதுகாப்பு வலயமாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளதாலும், இந்த வலயத்துக்குள் உள்ள 1661 ஏக்கர் காணியை சட்டத்தின் பிரகாரம் இராணுவத்துக்கு உரித்தாக்குவதற்கும், காணி உரிமையாளர்களுக்கு காணி அமைச்சின் ஊடாக இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாலும் இந்த அடையாளப்படுத்தப்பட்ட காணியை விடுவிக்க முடியாது.

பொதுப் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்புக்கு அவசியமற்ற காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படுகின்றன. 2009 முதல் 2024ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவ கட்டுப்பாட்டில் இருந்த 64,663 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் 692 ஏக்கர் காணிகளை விடுவித்தோம். எதிர்வரும் ஓரிரு மாத காலப்பகுதியில் 243 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நான் அண்மையில் வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்தேன். பொதுமக்களுடன் கலந்துரையாடினேன். பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மக்கள் மத்தியில் செல்லாமல் ஏதாவது சொல்லலாம். அது எமக்கு பிரச்சினையில்லை. மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு காணிகளை இயலுமான வகையில் விடுவிப்போம். விடுவிக்க முடியாத காணிகளுக்காக மாற்றுக் காணிகளோ அல்லது இழப்பீடோ வழங்கப்படும். அதற்கான நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டுள்ளோம் என்றார். (ம-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்




திருமதி வசந்தி துதிகரன்
SLTS - II (B.A, PGDE)

08.07.2026 அன்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு நிகழ்வில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) பட்டத்தினைப் பெற்ற எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி வசந்தி துதிகரன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/பரமேஸ்வரா வித்தியாலயம்,
திருநெல்வேலி.

(C-5999)



DCM யாழ் நகர்
வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை
A/L 2028
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம் :
11.07.2026 காலை 8.00 மணி (சனி)
நிர்வாகம் : 0777789815
(C-5995)



## சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் தேவை

பால் சார்ந்த உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு தகுதியுடைய சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் ஒருவர் தேவை.

தகுதி
- வயது எல்லை - 25 - 40 வயது.
- அனுபவம் விரும்பத்தக்கது.
- யாழ்.மாவட்டத்திற்குள் முழுமையாக பயணிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(C-6003)

தொடர்புகளுக்கு
வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி
071-523-8127, 021-223-2673




## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் நகரத்தில் 7 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு

- ஒரு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்.
- மானிப்பாய் நகரம் சோதி வேம்படி வித்தியாலயம் அருகில் வேம்படி வீதியில்.
- யாழ் - காரைநகர் பிரதான வீதி 300 m தூரத்தில்.
- வங்கிகள், பாடசாலைகள் பிரதான வர்த்தக நிலையங்கள் 400 m. தூரத்தில்.
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம்.
- பார்வையிடும் நேரம் - காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு:- 074 029 2338
076 077 2674
(2498)





16 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

கடந்த 23.06.2026 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எங்கள் அன்புத் தந்தை

ஸ்ரீமான் சிதம்பரன் கதிரவேலன்

தோற்றம் - 13.03.1938 மறைவு - 23.06.2026

திதி : ஆனிமாத பூர்வபக்க நவமி

அவர்களின் சபிண்டீகரணம் எதிர்வரும் 12.07.2026 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் பன்னாலை, தெல்லிப்பழை, ஸ்ரீ வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய மணி மண்டபத்தில் நடைபெற்று தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"ஸ்ரீ கதிர்வேலகம்"
மாவை - கலட்டி,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்

(C-6001)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.